வளன் ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்

தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# ‘இந்தியா’ இதழில் வ.உ.சி. பாராதி நட்புத்திறம்

**பா.எழில்செல்வன்**

முனைவர்பட்ட ஆய்வாளர்( (முழுநேரம்), தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி,

திருச்சிராப்பள்ளி-2

( திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழகத்தின் மிக முக்கியமான சுதந்திரப் போராட்ட வீரர்களில் ஒருவர் வ.உ.சிதம்பரனார் மற்றொருவர் சுப்ரமணிய பாரதியார் ஆவார். 64 ஆண்டுகள் இம்மண்ணில் வாழ்ந்த சிதம்பரனார், பாரதியை விட பத்து வயது பெரியவர். இருவரின் தகப்பனாரும் எட்டயபுர சமஸ்தானத்தில் நெருங்கிய நண்பர்கள். தமிழகமெங்கும் பாரதியின் ஆற்றல் உணரப்பட்டிருந்தாலும், ஒரே பகுதியில் வாழ்ந்தும், தன் 34 வயதில்தான் (1906-ல்) பாரதியை முதன்முதலாய்ச் சந்திக்கிறார் என்னும் செய்தி ஆச்சர்யப்பட வைக்கிறது. அப்போது வ.உ.சி.யின் வயது 34. பாரதி 24 வயது இளைஞர். பல கிளை நதிகள் ஒன்றாக கடலில் சங்கமம் ஆவது போல இரு வேறு திசைகளில் இருந்த வ.உ.சி.யும் பாரதியும் திலகரின் ஒத்தக் கருத்தியலால் ஒன்றாக சங்கமித்து ஆங்கிலேயருக்கு மிகப் பெரிய சமுத்திரமாகக் காட்சியளித்தார்கள். நாவாயால் தேசம் காக்க முயன்ற வ.உ.சி.க்கு தனது நா வாயால் உதவி புரிந்தார் பாரதியார். இந்தியா இதழலின் மூலம் வ.உ.சி.யின் கொள்கைகளை ஆதரித்து தொடர்ந்து எழுதினார் பாரதியார். ஒத்தக் கொள்கையாளராகப் பழக துவங்கியவர்கள் மாமன் மாப்பிள்ளை என உறவின் முறையாக மாறிப்போன வரலாற்று நிகழ்வை இக்கட்டுரை விளக்கியுரைக்கிறது.

**கலைச்சொற்கள்**

சுதேசியம்,காலியோ, லாவோ, ஸ்டீமர், தர்ம நிதி, கருத்துப் படம்,சுதேசிக் கப்பல், பேடி.

**முன்னுரை**

இந்திய தேசம் பழமையும் பெருமையும் வாய்ந்த நாடாகும். நம் நாடு ஆங்கிலேயர் கையில் அடிமைப்பட்டுக் கிடப்பதைக்கண்டு பலர் கொதித்தெழுந்தனர். சொந்த மண்ணை அந்நியரிடம் இழந்து அடிமையாக வாழ்ந்த நம் மக்களை மீட்டெடுப்பதற்காக இந்திய தேசம் முழுவதும் பல தலைவர்கள் தோன்றினார்கள். இந்திய சுதந்திர வரலாற்றில் தேசிய அளவில் மிக முக்கியமாக மூன்று ஆளுமைகள் கருதப்பட்டனர். பாலகங்காதர திலகர்,அரவிந்த கோஷ், வ.உ.சிதம்பரனார். தமிழகத்திலிருந்து தேசிய அளவில் அரசியலில் ஈடுபட்ட முதல் தலைவர் வ.உ.சிதம்பரனார் ஆவர். 1872 ஆம் ஆண்டு வ.உ.சிதம்பரனார் தூத்துக்குடியில் உள்ள ஒட்டப்பிடாரத்தில் பிறந்தார். ஒரு பத்து ஆண்டுகள் கழித்து தூத்துக்குடியில் எட்டயபுரத்தில் பாரதியார் 1882 ஆம் ஆண்டு பிறக்கிறார். இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் சந்தித்துக் கொள்வதற்கு முன்பாகவே பாலகங்காதர திலகரின் அரசியலினால் ஈர்க்கப்பட்டவர்கள். 1906 ஆம் ஆண்டு சென்னையில் வ.உ.சிதம்பரனார் முதன்முறையாக பாரதியை சந்திக்கின்றார். ஏற்கனவே திலகரின் தீவிரவாத கொள்கையை ஏற்று சுதந்திர போராட்டத்தில் இருவரும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். இவர்களின் முதல் சந்திப்பிற்குப்

பிறகு பாரதியும் வ.உ.சி.யும் இணைந்து மேற்கொண்ட பணிகளின் வாயிலாக இவர்களின் நட்பின் ஆழத்தை இக்கட்டுரை விளக்கியுரைக்கிறது.

**வ.உ.சி - பாரதி முதல் சந்திப்பு**

பாரதியாரின் தந்தை சின்னச்சாமி ஐயரும் வ.உ.சி.யின் தகப்பனார் உலகநாதன் பிள்ளையும் நல்ல நண்பர்கள். சின்னச்சாமி ஐயர் எட்டயபுரம் சமஸ்தானத்து உயர்மட்ட ஊழியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அதே சமஸ்தானத்தில் வக்கீலாகத் திகழ்ந்தவர் உலகநாதன் பிள்ளை அவர்கள்.

வ.உ.சி.யின் சொந்த ஊரான ஒட்டப்பிடாரத்தில்தான் அப்போது தாலூகா நீதிமன்றம் உள்ளிட்ட முக்கிய அலுவலகங்கள் இருந்தன. சமஸ்தான அலுவல் நிமித்தமாக ஒட்டப்பிடாரம் வருகிறபோதெல்லாம் தனது அலுவலக சகாவும் நண்பருமான வக்கீல் உலகநாதன் பிள்ளையின் வீட்டில்தான் தங்குவார் சின்னச்சாமி ஐயர்.

அவ்வாறு தங்கிய நேரங்களில் நண்பர்கள் இருவரும் மற்றும் சிலரும் ஓய்வாகப் பேசிக்கொண்டிருப்பார்கள். சின்னச்சாமி ஐயருக்கு ஒரு மகன் இருப்பதாகவும், அவன் அதிபுத்திசாலி என்றும், தமிழில் சுயமாகப்பாடும் திறன் பெற்றவன் என்றும் உலகநாதன்பிள்ளை தனது மகன் வ.உ.சிதம்பரம் பிள்ளையிடம் சி.சுப்பிரமணிய பாரதி குறித்துப் பெருமையாகச் சொல்வதுண்டு.

அப்போது வ.உ.சி.பதினைந்து வயதுப் பாலகனாகஇருந்தார். பின்னர் வளர்ந்து வழக்கறிஞரான பிறகு தனது பணியின் பொருட்டு தங்கியிருந்த திருவல்லிக்கேணியிலிருந்து சென்னை சென்றிருந்தபோது,போகிற வழியில் இந்தியா இதழின் அதிபர் திருமலாச்சாரியாரின் வீடு அங்கிருப்பதை அறிந்தார். அடிக்கடி அவ்வீட்டைத் தாண்டிச் சென்ற வ.உ.சி.ஒருநாள் அவ்வீட்டுக்குள் திருமலாச்சாரியாரைச் சந்திக்கும் நோக்கில் சென்றார். அதிபர்,வீட்டின் மாடிப்பகுதியில் இருப்பதாக அங்கிருந்தவர்கள் சொன்னார்கள்.மாடிக்குச் சென்றுதிருமலாச்சாரியாரைப் பார்த்துத்தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார் வ.உ.சி.

வ.உ.சி. தனது ஊரையும் பெயரையும் உச்சரித்து முடித்தவுடனேயே திருமலாச்சாரியார் மாடியின் உள்ளே அமைந்த அரங்கை நோக்கி "பாரதி, உங்கள் ஊரார் ஒருவர் வந்திருக்கிறார்" என்று உரக்கச் சொல்ல, உள்ளே இருந்த பாரதி, அதிபர் அமர்ந்திருந்த இடத்துக்கு வந்தார். இவர்தான் ஆசிரியர் சுப்பிரமணியபாரதி என்று வ.உ.சி.க்கு பாரதியை திருமலாச்சாரியார்அறிமுகப்படுத்தினார். பாரதியைப் பார்த்த அத்தருணத்தை சிதம்பரனார் "முண்டாசுக் கட்டுக்கும் முறுக்கு மீசைக்கும் பெயர் பெற்றது எங்கள் ஜில்லா. எனவே தலைப்பாகைக் கட்டைப் பார்த்ததுமே, பாரதியார் என்பதைக் கொண்டேன்" (வைத்தியநாதன் 2021:10) என்று தன் எழுத்தில் பதிவு செய்துள்ளார்.

வ.உ.சி.க்கும் பாரதிக்கும் 10 ஆண்டுகள் வயது வித்தியாசம் இருந்தாலும் அவர்களின் சுதந்திர உணர்வு அவற்றையெல்லாம் மறந்து இருவரிடமும் இணக்கத்தை ஏற்படுத்தியது. "இந்த முதல் சந்திப்பும் பேச்சுமே என்னை சோழனாகவும் அவரை கம்பனாகவும் நான் நினைக்கும் படி செய்தது" (மேலது:11) என்று வ.உ.சிதம்பரனார் பதிவு செய்துள்ளார்.

**வ.உ.சி. பாரதி நட்பின் மகத்துவம்**

பாரதியுடன் வ.உ.சி. திருவல்லிக்கேணிக் கடற்கரையில் மாலை நேரத்தில் உலாவிக் கொண்டிருந்த போது வ.உ.சி. பாரதியிடம் என் உள்ளத்தில் மின்மினிப்பூச்சி போன்று மின்னிக் கொண்டிருந்த தேசாபிமான நெருப்பு விளக்குப் போல ஒளிவிட்டு பிரகாசித்தது என்றார். அப்போது கடல் கரையில் இருந்த மின்சார விளக்குகள் பளிச் என ஒளிவிட்டு எரிந்தன. இதனைக் கண்ட பாரதி "பிள்ளைவாள், சக்தி துணை செய்வாள். நம் உள்ள ஒளி பிரகாசிக்கும்போது மின் ஒளியையும் பிரகாசிக்கச் செய்தது நம் அன்னைப் பராசக்தியே! அவள் வாழ்க! இனி நம் முயற்சி வெற்றி, எடுத்ததெல்லாம் வெற்றி என்பதற்கான சுப சகுனம் இதுதான் வாழி அன்னை! வாழி அம்மை! சக்தி வாழி!"(மேலது:11) என ஆவேசம் வந்தவர் போலப் பேசினார்.

பின்னர் நாள்தோறும் இந்த சந்திப்பு தொடர்ந்தது. இந்தியா பத்திரிக்கையின் அதிபரும், அதன் ஆசிரியர் பாரதியும் வ.உ.சிதம்பரனாரும் அடிக்கடி சந்தித்து பேசுவதை பழக்கமாகக்

கொண்டிருந்தனர்.இதன் விளைவாக சுப்பிரமணிய பாரதியாரும் வ.உ.சி.யும் சோழனும் கம்பனுமாய் அறிமுகமாகி கடைசியில் மாமனும் மருமகனுமாய் மாறிப்போனார்கள். உலக நாடுகளின் வரலாறுகளை மாமா பாரதி அவர்கள் தனக்கு சொல்வதாக வ.உ.சிதம்பரனார் பதிவு செய்துள்ளார்.

"பிரான்ஸ், இத்தாலி இவை போன்ற பிற தேசங்களின் சரித்திரத்தை மாமா ஆதியோடந்தமாக ஆவேசத்துடன் கூறிமுடிப்பார். நான் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருப்பது வழக்கம். இடையிடையே ஏதாவது சந்தேகம் தோன்றினால் அவரிடம் கேட்பேன். அவர் காரணம் கூறி விளக்குவார்" (மேலது:12). இதன் மூலம் தமிழகத்தின் ஏதோ ஒரு சிறிய பகுதியில் இருந்த பாரதி உலக நாடுகளின் வரலாறுகளைத் தெரிந்து வைத்திருந்தார் என்பது அவரின் தொலைநோக்குப் பார்வையை நமக்கு உணர்த்துகிறது .மேலும் பாரதியை சிதம்பரனார் மாமா என்று உரிமையோடு அழைத்ததும், நம்மால் அறிய முடிகிறது.

**சுதேசி கப்பல் கம்பெனி தோற்றம்**

தமிழகத்தில் தூத்துக்குடிக்கும் கொழும்பிற்கும் இடையே கப்பல் வணிகம் மிக சிறப்பாக நடைபெற்றது இவ் வணிகத்தை பி.ஐ.எஸ்.என் கம்பெனி என்ற ஆங்கிலேயர் நிறுவனம் மட்டுமே கப்பல் வணிகத்தில் ஈடுபட்டிருந்தது. 1906 ஆம் ஆண்டு **'சி.வ.கம்பெனி'** என்ற சுதேசி கம்பெனியை பம்பாய் வர்த்தகர் ஒருவருடன் ஒப்பந்தம் போட்டு கப்பலை வாடகைக்கு எடுத்து வ.உ.சிதம்பரனார் அதனை நடத்தினார் வ.உ.சி.யின் நண்பராக திகழ்ந்த சிவபுரம்**'சி.வ. நல்லபெருமாளை'** குறிக்கவே **'சி.வ.கம்பெனி'**என்ற பெயர் வந்தது. சுதேசி கப்பலை வாடகைக்கு கொடுத்த பம்பாய்க்காரர் ஆங்கிலேயருடன் இணைந்து விட்ட காரணத்தால் சுதேசி கப்பல் கம்பெனி முயற்சி தோற்றது. இதன் காரணமாக சிதம்பரனார் சொந்த கப்பல் ஒன்றை வாங்கி சுதேசி கப்பல் கம்பெனி நடத்த தீர்மானம் செய்தார். 1906 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ஆம் தேதி சுதேசி **'டீம் நேவிநேசன் கம்பெனி லிமிடெட்'** என்ற பெயரில் புதிய கப்பல் கம்பெனி ஒன்றைத் துவங்கினார் சிதம்பரனார்.

புதிதாகத் தொடங்கப்பட்ட சுதேசி கப்பல் கம்பெனியின் மூலதனம் ரூபாய் பத்து லட்சம் என நிர்ணயம் செய்தார் மொத்தம் 40 ஆயிரம் பங்குகளை சேர்ப்பது எனவும், ஒரு பங்கு ரூபாய் 25 என நிர்ணயம் செய்தார். இந்தப் பங்குகளை இந்தியா,இலங்கை உள்ளிட்ட ஆசிய கண்டத்து நாடுகளில் உள்ளவர்களை அணுகி சேர்ப்பது எனவும் தீர்மானித்தார்.

மதுரை தமிழ் சங்கத்தின் தலைவராக விளங்கிய பாண்டித்துரை தேவரை இக்கம்பெனிக்கு தலைவர் ஆக்கினார் 15 இயக்குனர்களை தேர்வு செய்தார் வ.உ.சி.இந்த கப்பல் கம்பெனியின் துணைச் செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்டார். வ.உ.சி. இக்கம்பெனிக்கு என்று எட்டு நோக்கங்கள் அறிவிக்கப்பட்டன சுதேசி கைத்தொழிலையும் வியாபாரத்தையும் பெருக்குவதே எட்டு அம்சங்களின் நோக்கமாகும்.

கம்பெனியின் பங்கு குறித்த விவரத்தையும் நிர்வாகிகள் பற்றிய செய்திகளையும் இந்தியா இதழில் 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 20ஆம் தேதி செய்தியாக பாரதியார் வெளியிட்டார்.

"தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே ஸ்டீமரோட்டுவதற்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மேற்படி சுதேசிய கம்பெனி 16-ம் தேதியன்று ரெஜிஸ்டர் செய்யப்பட்டது. பங்கொன்றுக்கு 25 ரூபாய் வீதம் 40,000 பங்குகள் சேர்ந்து 2 லக்ஷம் ரூபாய் முதலுடன் இந்தக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பங்காளிகளனைவரும் ஆசியா கண்டத்தவர்களாகவே இருக்க வேண்டுமல்லாது ஐரோப்பியர்களிடமிருந்து பங்குகள்பெற்றுக் கொள்ளப்படமாட்டா. இந்தக் கம்பெனியின் பிரெஸிடெண்ட் மிஸ்டர் பாண்டித் துரைத் தேவர் (பாலவனத்தம் ஜமீன்தார்). மெஸர்ஸ் ஹாஜி பகீர் முகமது சேட் கம்பெனியாரே செக்ரடெரிகள். அஸிஸ் டெண்ட் செக்ரிடெரியாக தூத்துக்குடி வக்கீல் மிஸ்டர் சிதம்பரம் பிள்ளை நியமிக்கப்பட்டிருக்கிறார்."(ஆ.இரா.வேங்கடாசலபதி (1994):47) என்பதை வெங்கடாசலபதி நூலின் வாயிலாக அறிய முடிகிறது.

**இந்தியா இதழில் சுதேசிய கப்பல் கம்பெனி**

பம்பாய் சென்று எஸ்.எஸ்.லாவோ, எஸ்.எஸ்.காலியோ என்று இரண்டு கப்பல்களை தூத்துக்குடி துறைமுகத்திற்கு கொண்டு வந்தார், வ.உ.சி..

“வெகுகாலமாய்ப் புத்திரப் பேறின்றி அருந்தவம் செய்து வந்த பெண்ணொருத்தி ஏககாலத்தில் இரண்டு புத்திரர்களைப் பெற்றால், எத்தனை அளவற்ற ஆனந்தமடைவாளோ அத்தனை ஆனந்தத்தை நமது பொழுது மாதாவாகிய பாரததேவியும் இவ்விரண்டு கப்பல்களையும் பெற்றமைக்காக அடைவாளென்பது திண்ணமே. ஸ்ரீ வ.உ.சிதம்பரம் பிள்ளையும் அவருடனின்றுதவிய மற்ற நண்பர்களும் தாம் பிறந்து வளர்ந்த தாய்நாட்டிற்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் செய்து விட்டார்கள்” (த.ஸ்டாலின் குணசேகரன் (2019):202)என்று தமது இதழில் பாராட்டினார் பாரதியார்.

1907 ஆம் ஆண்டு மே 25ஆம் தேதி இந்தியா இதழில் சுதேசி கப்பல் வாங்கியதை கொண்டாடும் விதமாக ஒரு கருத்து படத்தை பாரதியார் வெளியிட்டார்.அதற்கான விளக்கத்தையும் அவற்றில் குறிப்பிட்டுள்ளார்.

“சுதேசியக் கப்பல் வந்தே மாதரக் கொடியுடன் வருதல், இந்திய ஜனங்களின் மகிழ்ச்சி.தூத்துக்குடி ஸ்வதேசீய ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியார் ஸ்டீமர்கள்கொண்டு வந்திருக்கும் மங்களகரமான செய்தியைக் கருதி நாம் “சுதேசிக் கப்பல்கள்” என்ற சித்திரம் பதிப்பித்திருக்கின்றோம். தூத்துக்குடியாரின் அரிய முயற்சிக்கு நமது நாட்டிலுள்ளோர் அனைவரும் பொருளாலும், வாக்காலும் வேறுவ கையாலும் துணைபுரியக் கடமைப் பட்டிருக்கிறார்களென்பதை இங்கே வலியுறுத்துகின்றோம்” (ஆ.இரா.வேங்கடாசலபதி (1994):51).இக்குறிப்பில் வ.உ.சி.யை தூத்துக்குடியார் என்று பாரதி அழைப்பது குறிப்பிடத்தக்கது.




சுதேசி கப்பல் கம்பெனியின் வளர்ச்சியினால் ஆங்கிலேய கப்பல் கம்பெனி நலிவடைய தொடங்கியது. இதனால் தூத்துக்குடியில் இருந்து கொழும்புவிற்கு செல்லும் பயணிகள் கட்டணத்தைக் குறைத்தும் சரக்குக் கட்டணத்தைச் சரிபாதியாக குறைத்தும் வாடிக்கையாளர்களை ஈர்க்கும் முயற்சியில் ஆங்கிலேய கப்பல் கம்பெனி செயல்பட்டது. இறுதியாக கட்டணமே இல்லாமல் பயணிகளை ஏற்றியும் சென்றனர். பொதுக்கூட்டங்களும் தெருமுனைப் பிரச்சாரங்களும் வ.உ.சி. அவர்களினால் நிகழ்த்தப்பட்டு இந்தத் திட்டம் முறியடிக்கப்பட்டது. மக்களும் சுதேசி கம்பெனியையே ஆதரித்தனர்.

சுதேசி கப்பல் கம்பெனியைத் தொடர்ந்து நடத்துவதற்காக பாரதியார் தொடர்ந்து பேசியும், தனது பத்திரிக்கையில் எழுதியும் வந்தார் தருமநிதி என்கிற பெயரில் நிதியை திரட்டி அக்கப்பல் கம்பெனிக்கு உதவிட பாரதியார் முன்வந்தார். மக்களிடமிருந்து பெறப்பட்ட நிதிக் கணக்கை தன்னுடைய இதழில் தொடர்ந்து வெளியிட்டு வந்தார் பாரதியார். நிதி திரட்டுவது தொடர்பாக பாரதியார் கருத்துப்படம் ஒன்றை வெளியிட்டிருந்தார். பாரதமாதா மக்களிடம் சுதேசி கப்பல் கம்பெனிக்கு அனைவரும் உதவி செய்யுங்கள் என்று கட்டளையிடுவதாக அப்படம் அமைந்திருந்தது. கருத்துப்படத்திற்கு கீழாக அப்படத்திற்கான விளக்கக் குறிப்பை பாரதியார் ஒரு கதை வடிவில் அமைத்துத் தந்திருப்பது போற்றுதற்குரியது.



“பாரத மாதர் -இதற்கு நீங்களெல்லோரும் உதவி புரியுங்கள். இது க்ஷேமமடைய வேண்டுமென்பது எனது சித்தம். இந்த முயற்சி மென்மேலும் அபிவிருத்தி யடைவதனின்றும் எனக்குப் பல சுகங்களுண்டாகும். இது வாழ்க. ஜனங்கள் - ததாஸ்து!....புதுச்சேரியில் நமது ஆபீஸைச் சேர்ந்த சில வாலிபர்கள் சுதேசீயக் கப்பல் தர்மநிதியின் பொருட்டுப் பணம் சேகரிக்க ஒரு உண்டியல் பெட்டி கொண்டு சில கடைக்காரரிடம் போனார்கள். அப்போது வீதியில் ஒரு எளிய ஸ்திரி இவர்களிடம் “எதற்கையா பணம் வசூலிக்கிறீர்கள்?” என்று கேட்டாள். இவர்கள்,“தூத்துக்குடியிலே ஓடும் சுதேசியக் கப்பலுக்கு” என்றார்கள். உடனே அவள் மன மகிழ்ச்சியுடன் ஒரு காசு பெட்டிக்குள் போட்டுவிட்டு, “ஐயோ பாவம், வேலை செய்யுங் கள், உங்கள் காரியம் கைகூடும்” என்று சொன்னாள். மற்றொரு ஏழை ஸ்திரி இதைப் பார்த்து,“ஐயா, என்னிடம் காசில்லை. விலைக்குக் வாங்கிக் கொண்டு வத்தேன். கத்தரிக்காய்கள் இருக்கின்றன. அவற்றை வாங்கிக் கொள்ளுவீர்களா?” என்றாளாம். அதற்கு நமது வாலிபர்கள் “வேண்டாமம்மா! உன் போன்ற நல்ல சித்தமுடையவர்களின் ஆசீர்வாதமிருந்தாலே எங்கள் முயற்சி வெற்றியடைந்து விடும். நீ ஏழை. உன் குழந்தைகளுக்குக் கொண்டு போகும் காய்கறியை நாங்கள் வாங்கலாமா?” என்று சொல்ல அந்த ஸ்திரீ அன்புடன் வாழ்த்திவிட்டு சென்றாள். இதனையெல்லாந்தான் நாம் ‘மாதாவின் கட்டளை’ என்கிறோம்.” (மேலது:86)

**“நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர் நிதி**
**குறைந்தவர் காசுகள் தாரீர்**
**அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்**
**ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்”** (சு.உஷாராணி (உ.ஆ) (2021):342)

என்ற தமது கவிதை வரிகளை மேற்கண்ட கதையின் மூலம் விளக்குவதாக அமைந்துள்ளது.

வ.உ.சிதம்பரனாருக்கு ராஜதுரோக குற்றத்திற்காகவும்,சுதந்திர போராட்ட தியாகி சிவா அவர்களுக்கு ஆதரவு அளித்ததற்காகவும் இரட்டை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. சிதம்பரனார் சிறையில் இருந்த சமயத்தில் தான் முழுமூச்சாக எதிர்த்து வந்த ஆங்கிலேய கப்பல் கம்பெனிக்கே சுதேசிய கப்பல் கம்பெனியை விற்றுவிட்டனர். இதை அறிந்த பாரதியார் “சிதம்பரம், மானம் பெரிது! ஒரு சில ஓட்டைக் காசுகளுக்காக எதிரியிடமே அக் கப்பலை விற்று விட்டார்களே. பாவிகள்! அதைவிட அதைச் சுக்கல் சுக்கலாக நொறுக்கி வங்காள விரிகுடாக் கடலில் மிதக்க விட்ட டாலாவது என் மனம் ஆறுமே! இந்தச் சில காசுகள் போய்விட்டாலா தமிழ்நாடு அழிந்து விடும்? பேடிகள்!” (த.ஸ்டாலின் குணசேகரன் (2019):202) என்று எழுதினார்.

**வ.உ.சியின் சிறைவாழ்வும் பாரதியின் மனவேதனையும்**

சிதம்பரனாருக்கு ராஜ துரோக குற்றத்திற்காகவும் சுப்பிரமணிய சிவாவுக்கு துணை நின்றதர்க்காகவும் 40 ஆண்டு கால இரட்டை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. சிதம்பரனாருக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பை கேட்டு மக்கள் கதறி அழுதார்கள். நாட்டில் உள்ள பத்திரிக்கை அனைத்தும் இதனை மிக வன்மையாக கண்டித்து எழுதியது. அவரது சகோதரர் இச்செய்தியை கேட்டு பைத்தியமாக மாறிப்போனார். அப்போது இந்தியாவுக்கு அமைச்சராக இருந்த மர்லி என்பவர் இந்த தண்டனை நியாயமற்றது என்று குறிப்பிட்டார். இத்தண்டனை படிப்படியாக

குறைக்கப்பட்டு ஆறு ஆண்டுகளாக தீர்ப்பளிக்கப்பட்டது. இத்தண்டனையின் போது சிதம்பரனாருக்கு வயது 35 தான். தன் மனைவி மக்களை பிரிந்து 6 ஆண்டுகள் கோயம்புத்தூர் மற்றும் கண்ணனூர் சிறையில் தண்டனை காலத்தை நிறைவு செய்தார். “அச்சமில்லை அச்சமில்லை” என்று பாடிய பாரதி இச்செய்தியை அறிந்து உள்ளம் நடுங்கி போனார். தனது இந்தியா பத்திரிக்கையில் 28-11-1906 ஆம் நாள் பாரதி எழுதுகிறார்“தற்சமயம் சிறைப்படுத்தியிருக்கும் கோயம்புத்தூர் ஜெயில் அதிகாரி அவரைக் கைகால் விலங்கிட்டுக் கேவலம் மிருகம் போல் எண்ணெய் ஆட்டும் செக்கிழுக் கும்படிச் செய்திருக்கிறாராம்! நடுவெயிலில் தீப்பறக்கும் செக்கிழுத்துக் கஷ்டமடை கிறாராம். அந்தோ! இக்கொடிய துன்பத்தை நினைக்கும்போதே நெஞ்சுருகு கிறதே! இங்கெழுதும்போதே கைநடுங்குகிறதே! இக்கொடுந்துன்பத்தைச் சகிக்கும் தேசபக்தர் பாடு எங்ஙனமோ? கடவுளேயறிவர்! கைதிகட்கு எத்தனையோ விதமான வேலைகளிருக்க இத்தேசபக்தருக்கு நாற்கால் மிருகங்களும் துன்புறக் கூடிய எண்ணெய் யந்திரம் சுழற்றும் வேலையா கொடுக்கவேண்டும்? இத்தகைய கொடிய சிக்ஷைகள் இத்தேசபக்தருக்குச் செய்ய வேண்டுமென்று பட்டது அச்சிறைச்சாலை அதிபரின் புத்திக்கூர்மை போலும்! ராஜ துரோகக் குற்றங்கள் செய்ததாகக் கருதுகின்றபடியால் தன்னையும் (வெள்ளையரானபடியால்) துவேஷித்ததாகக் கருகித் தருணம் வாய்த்ததென்று இவ்விதமான, மிருகங்களும் துன்புறக்கூடிய கடின வேலையை இத்தேச பக்தருக்கிட்டுப் பழிக்குப் பழி வாங்குகிறார் போலும்! இவண், சிறைச்சாலை அதிபர் சுத்த வீரரே!”(திருவேங்கிமலை சரவணன் (2006):61-62) இவ்வாறு ஆதங்கத்தை ஆவேசத்தோடு எழுதினார் பாரதியார்.

**“வேளாளன் சிறை புகுந்தான்,**
**தமிழகத்தார் மன்னனென மீண்டான் என்றே**
**கேளாத கதை விரைவில் கேட்பாய் நீ,**
**வருந்தலையென் கேண்மைக் கோவே.”** (சு.உஷாராணி (உ.ஆ) (2021):184)

“ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளையவர்கள் கோயமுத்தூர்ச் சிறைக் கோட்டத்தில் இருந்த பொழுது, புதுவையிலிருந்து அவரைக் காணச் சென்ற பரலி சு. நெல்லையப்பரிடம் ஸ்ரீமான் சுப்ரமணிய பாரதியார் மூன்று அழகிய பாடல்களை எழுதி அனுப்பினார். மூன்றில் ஒன்று மட்டுமே கிடைத்திருக்கிறது” என்ற குறிப்புடன் இப்பாடலைச் சுத்தானந்த பாரதியார் முதன் முதலில் வெளியிட்டுள்ளார். (ஆ.இரா.வேங்கடாசலபதி (1994):117).

தனது நண்பர் சிதம்பரனார் படுகிறது துன்பத்தை சகித்துக் கொள்ள முடியாத பாரதி இறைவனிடம் முறையிடுகிறார்.

**“மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்**
**நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ!**
**மாதரையும் மக்களையும் வன்கண்மை யாற் பிரிந்து**
**காதல் இளைஞர் கருத்தழிதல் காணாயோ!”** (சு.உஷாராணி(உ.ஆ) (2021):120)

என்ற இக்கவிதையில் சிதம்பரனாரை “மேலோர்” “நூலோர்” “காதல் இளைஞன்”என்று பாரதி கூறியிருப்பது கூர்ந்து கவனிக்கத்தக்க ஒன்று. சிதம்பரனார் கல்வியாளர்,அறிஞர்,

உரையாசிரியர், பதிப்பாசிரியர், கவிஞர் என பன்முகத்தன்மை கொண்டவர். அதனால் பாரதி நூலோர் என்று கூறினார். சிதம்பரனார் தண்டனையை அனுபவிக்கிற போது அவருக்கு வயது 35 தான் திருமணம். ஆகி காதல் வாழ்க்கையை வாழ வேண்டிய வயதில் மனைவியையும் மக்களையும் பிரிந்து சிறையில் வாடுகிற சிதம்பரனாரைக் காதல் இளைஞன் என்றார். இப்படியாக இவர் படுகிற துன்பத்தை கூறி இறைவனிடம் முறையிடுகிறார் பாரதியார்.

**இறுதி மூச்சில் பாரதிப் பாடல்கள்**

இந்திய சுதந்திரப் போரில் வ.உ.சிக்கு கிடைத்த பரிசுகள் இரண்டு.ஒன்று வறுமை மற்றொன்று நோய்.1936-ஆம் ஆண்டின் போது நோய் முற்றிப் படுத்த படுக்கையாகிவிட்டார் சிதம்பரனார்.ஏறக்குறைய நாற்பது நாட்களுக்கு மேலே படுக்கையே கதி என்று கிடந்தார்.

உயிர் விடுபவர்கள் சைவ மரபினராக இருந்தால் சுற்றத்தார் தேவாரம், திருவாசகம் படிப்பார்கள். இறப்பவர்கள் வைணவர்களாக இருந்தால் உறவு முறையினர் நாலாயிர திவ்வியப் பிரபந்த நூல்களைப் படித்து ஆன்ம பேறு பெற வைப்பர்.

சிதம்பரம் பிள்ளை திருக்குறளையே, தமிழ் வேதமாகக் கொண்டவர். சுதந்திர உணர்வு கொண்டவர், நாடு விடுதலை பெற்றிட அயராது பாடுபட்டவர் ஆதலால், கவிமன்னன் பாரதியார் பாடல்களைக் கேட்க விரும்பினார். **“என்று தணியும் இந்த சுதந்திர தாகம்”** என்ற கவிதையை வ.உ.சி. எப்போதும் விரும்பிக் கேட்பார்.இப்படலைக் கேட்ட படியே 1936-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் நாளன்று நள்ளிரவில் கப்பலோட்டியத் தமிழர் சிதம்பரம் பிள்ளை மறைந்தார்.

**முடிவுரை**

வ.உ.சிதம்பரனார், சுப்ரமணிய பாரதியார், சிவா ஆகிய மூவரும் தமிழக சுதந்திர வேள்வியின் திரிசூலமாக கருதப்பட்டவர்கள். வ.உ.சிதம்பரனாருக்கும் பாரதிக்கும் வயதில் 10 ஆண்டுகள் வித்தியாசம் இருந்தாலும், இருவரும் இணைந்து சுதந்திர வேள்வியில் ஈடுபட்டனர். இவ்விருவருமே சுதந்திர போராட்ட தியாகிகள் மட்டுமல்லாமல், சிறந்த இலக்கியவாதிகளாகவும் திகழ்ந்தார்கள். பாலகங்காதரத் திலகரின் தீவிரவாத இயக்கத்தில் மிக முனைப்புடன் செயல்பட்டார்கள். ஒத்த சிந்தனை உடைய சிதம்பரனாரின் பேச்சும் பாரதியின் எழுத்தும் மக்களிடையே சுதந்திர வேள்வியை கொழுந்து விட்டு எரியச் செய்தது என்பதை இங்கு நம்மால் அறிய முடிகிறது. வ.உ.சிதம்பரனாரும் பாரதியாரும் சுதேசமித்திரன் அலுவலகத்தில் முதல் முறையாக சந்தித்துக் கொண்டார்கள், என்கிற செய்தியை சிதம்பரனார் அவர்கள் எழுதிய கட்டுரையின் மூலம் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.முதல் சந்திப்பிலேயே இருவரும் மாமா பாரதி,மாப்பிள்ளை சிதம்பரம் என்று உறவுமுறை வைத்து அழைக்கும் அளவிற்கு நெருக்கமாக மாறிப் போனார்கள். அன்று துவங்கிய இந்த உறவு இருவரும் மறைகிற வரை நீடித்தது. வ.உ.சிதம்பரனார் வாழ்வின் கடைசி நிமிடங்களில் “என்று தணியும் இந்த சுதந்திர தாகம்” என்ற பாரதி பாடலை கேட்டப்படியே உயிர் பிரிந்தார் என்றால் பாரதியின் மீது சிதம்பரனாருக்கு இருந்த காதலை நம்மால் உணர முடிகிறது. பாரதியார் சிதம்பரனாருக்கு உற்ற தோழனாக விளங்கினார். சிதம்பரனார் தோற்றுவித்த கப்பல் கம்பெனிக்கு தருமநிதி வசூலிப்பதற்காக தன் பேச்சின் மூலமாகவும் எழுத்தின் மூலமாகவும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார் பாரதியார் என்பதையும் வ.உ.சிதம்பரனார்

சிறைச்சாலையில் இருந்த போது யாருக்கும் அஞ்சாத பாரதியின் நெஞ்சமும் உடலும் நடுங்குகிறது என்ற செய்தி குறிப்பை தனது இதழின் வாயிலாக வெளிப்படுத்தி இருப்பதும் பாரதி சிதம்பரனார் மீது எவ்வளவு காதல் கொண்டுள்ளார் என்பதை நம்மால் தெரிந்து கொள்ள முடிகிறது. பாரதி, வ.உ.சி. என்ற இருபெரும் ஆளுமைகள் ஒருவருக்கொருவர் எப்படி உறுதுணையாக இருந்து இந்நாட்டிற்காக பாடுபட்டார்கள் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக நம்மால் அறிய முடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**


1. அரசு.மா.ரா., வ.உ.சிதம்பரனார், சாகித்திய அகாதெமி,சென்னை,மூன்றும் பதிப்பு 2012.
2. உஷாராணி.சு., பாரதியா் கவிதைகள், வா்த்தமானன் பதிப்பகம்,சென்னை, நான்காம் பதிப்பு 2021.
3. திருவேங்கிமலை சரவணன், தலைநிமிா்ந்த தமிழா்கள், குமுதம் புத்தகம்,சென்னை, முதற்பதிப்பு 2006.
4. வேங்கடாசலபதி.ஆ.இரா., வ.உ.சி.யும் பாரதியும், மக்கள் வெளியீடு, சென்னை, 1994.
5. வைத்தியநாதன், மகாகவிபாரதியாா் நினைவு, தினமணி,சென்னை, நூற்றாண்டு மலா் 1921-2021.
6. ஸ்டாலின் குணசேகரன்.த, வரலாற்றுப் பாதையில்,சென்னை,NCBH முதற்பதிப்பு 2019.